முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1418

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.08.2023, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்காரன் என் சக்திமிகு தேசிகா
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது நள்ளி திங்கள்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 32 ம் நாள், 17.08.2023 வியாழக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல் பெருக உரைப்பேன்
வாசிவென்ற ஞானியர் படைகள்
வலம் வந்து அரங்கன் குடிலை காத்துவர
3. வருகவே அரங்கன் தர்மபலம்
வையகத்தை காத்து வருதல் காண
தருகின்ற குணம் உலகமெல்லாம் பரவி
தவராஜன் ஆசியால் உலகோர்க்கு ஞானபலம் கூடும்
4. கூடுமே தர்ம பலத்தோடு
குறையின்றி வரும் மக்கள் அனைவரும்
அனைவருமே ஈடேறி சன்மார்க்க வழி
எல்லோரும் சமம் சமத்துவம் என்கின்ற
5. உயர் தர்ம வழி உலகோர் திளைத்து
உயர்வான ஞானபலம் கூடி
கூடியே இனி பிறவா பேற்றை
குரு அரங்கன் ஆசியோடு அடைய நேரும்
6. நாடெங்கிலும் அரங்கன் சன்மார்க்கம்
ஞானமாகப்பரவி உலக மாற்றமாக
ஈடேறும் அரங்கன் அவதாரத்தால்
இந்த பேருலகம் ஞான ஆட்சிதனையும் காணக்கூடும்

7. கூடவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
குருவே என சரணடைந்த மக்களுக்கெல்லாம்
ஈடேறும் இனி பிறவாத பெரும்பேறு
இயம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—